செந்தமிழ்

தொகுதி — ௬௧

பகுதி — ௬

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடு

(வெளியிட்ட நாள் 20—2—66)

செந்தமிழ்

தொகுதி ௬௧	திருவள்ளுவர் ஆண்டு 1997	பகுதி ௯
Vol. 61	Feb. 1966	No. 9

உலக மொழிகளில் பால் பகுப்பு

Dr. ச. அகத்தியலிங்கம்,
M. A. Ph. D. (Kerala) Ph. D. (Ind. U. S. A.)
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

[137-ம் பக்கத் தொடர்ச்சி]

அமெரிக்க இந்திய மொழிகளில் ஒன்றான யுச்சி (yuchi) மொழிச் சொற்களை அவைகள் ஏற்கும் பின்னொட்டினை யடிப்படையாக வைத்து உயர்திணை, உயிரல் திணை என இரு வகையாகப் பிரிப்பர். உயிர் திணைச் சொற்களை மீண்டும் (1) யுச்சி மக்களைக் குறிப்பன (2) பிற மக்களையும் உயிர்ப் பொருள்களையும் குறிப்பன என இரு வகைகளாகப் பிரிப்பர். யுச்சி இனத்தானைக் குறிக்கும் போது — எனென் (கொந்த(க்) — எனென் = யுச்சி மகன்) ஒட்டினையும் பிற மக்களைக் குறிக்கும் போது — வெனென் (கொந்த்(க்) — வனென் — வெள்ளையன், பிற இந்தியன், நீக்ரோ) என்ற ஒட்டினையும் ஏற்று வருதல் காணலாம்.

இது போன்றே உயிரல் திணைச் சொற்களும் அவைகளின் நிலைமையின் அடிப்படையில் (1) உயரமான பொருட்

களைக் குறிப்பன. (மரம், உயர்ந்த மலைகள், உயர்ந்த வீடுகள் போன்று நேராகஉயர்ந்து நிற்பன) (2) தள மட்டமான பொருட்கள் (3) வட்டமானவை.என மூன்று வகைகளாகப்பாகுபாடுசெய்யப்படுகின்றன. முதல்பிரிவைச்சார்ந்தவை —ப (—fa) என்ற ஒட்டினையும் இரண்டாவது பிரிவு —கெ என்ற ஒட்டினையும் மூன்ருவது பிரிவு —த்ஜி ஒட்டினையும் ஏற்றுவருகின்றன.

1 உயிர் திணை

1. கொந்த் (க்) — எஞென் = யுச்சி மகன்
2. கொந்த் (க்) வஞென் = வெள்ளையன் நீக்ரோ
   தல் — வஞென் = ஓநாய்

II. உயிரல் திணை

1. ய — ப = மரம் }
   யு — ப = வீடு } (நேராக நிற்பன)
2. ய — கெ = கட்டை, (தளமட்டமானவை)
3. தி — த்ஜி = பாறை (வட்டமானவை)



1. 3. யுச்சி மொழியைப் போன்றே அமெரிக்க இந்திய மொழிகளில் ஒன்றான ஹைடா (Haida) மொழிப் பெயர்களும் உயிர்திணை, உயிரல்திணை என இருபெரும் பிரிவுகளாகப் பிரிக்கப்படுகின்றன. எனினும் உயிர்திணையில் யுச்சிமொழியைப் போன்ற பிரிவினை இல்லை எல்லா இன மக்களும் பிற உயிரினங்களும் ஒரே பகுப்பில் அடங்குதல் காணலாம். ஆனால் உயிரல்திணைச் சொற்கள் 1. நீண்டவடிவமானவை 2. வட்டமானவை 3. சதுரமானவை போன்று 36 வகைகளாகப் பிரிக்கப்படுகின்றன, இப்பாகுபாடு சொற்கள் ஏற்கும் இனப்பிரிப்பு (classifiers) ஒட்டினை அடிப்படையாக வைத்து அமைந்துள்ளது.[1] இதுபோன்றே டக்கோட்டா (Dakota) மொழிப் பெயர்களும் அமைந்திருக்கக் காணலாம்.

1. 4. சில மொழிகளில் உயிர்திணைச் சொற்கள் ஆண், பெண் வேற்றுமையில்லாமல் நகருவன, (Moving) நிலையிலிருப்பன என்ற அடிப்படையில் பாகுபாடு செய்யப்படுகின்றன சில சீயோவன் (Siouan) மொழிகளில் இத்தன்மை காணப்படுகின்றன என்பர். இம்மொழிகளின் உயிரல் திணைப் பெயர்கள் ஹைடா மொழிப் பெயர்களைப் போன்று தளமட்டமானவை, வட்டமானவை, நிற்பவை, நுண்

---

1. The classification of nouns, referred to before is one of the charecteristic traits of the language. The group charecterizes objects as "long", "slender", "flat" "angular", "threadlike" "animate" etc

Franz Boaz, A Hand Book of American Indian Languages, P. 216.

பொருள் குறிப்பவை, எனப் பலவகையாகப் பிரிக்கப்படுகின்றன.



2. 1. சிலமொழிச் சொற்கள் 1. மனிதஇனத்தைக் குறிப்பன 2. உயிர் திணை (animate) 3. உயிரல்திணை (inanimate) எனப் பிரிக்கப்படுகின்றன. எடுத்துக் காட்டாக அமெரிக்க இந்தியமொழிகளில்ஒன்ருன சூனி (zuni) மொழிப் பெயர்களை அவைகள்ஏற்கும் பின்னெட்டுகளை அடிப்படையாகவைத்து மேற்கண்டவாறு பிரிப்பர். பெயர் அடிச் சொற்களின் (roots) பின்னுல் — கி என்ற ஒட்டினை இணைத்து மக்களினச் சொற்களையும் — சி அல்லது — (க்) கொ என்ற ஒட்டினை, இணைத்து விலங்கு, செடி, மரம் போன்றவற்றைக் குறிக்கும் சொற்களையும் உண்டு பண்ணுவர்.

1. த்ஸ்வ—கி = இளைஞன் (மணமாகாதவன்)
2. தொன—சி = ஒருவகை கரடி

3. ஒ—வெ = உணவு
ச—மெ = எலும்பு
பி—(க்)க்லெ = நூல்

இவ்வடிப்படையில் இம்மொழியின் கண் 14 வகையான பெயர்கள் உள்ளன.

3. 1. அமெரிக்க இந்தியர்களிடையே வழங்கும் குய்லெயுத் (**quileute**) மொழியில் காணப்படும் பெயர்கள் பெண்பால் சொற்கள் என்றும் பிறபால் சொற்கள் எனவும் இரு பிரிவுகளாகப் பிரிக்கப்படுகின்றன. இப்பண்பு இம்மொழியின் மூவிடப் பெயர்களில் (படர்க்கையில்) நன்கு காணப்படும். மேலும் இப்பெயர்கள் கண்களுக்குப் புலப்ப



டுவன (visible) புலப்படாதன (invisible) எனவும் புலப்படாதன மீண்டும் நாம் அறிந்தவை (known) அறியாதன (unknown) எனவும் பகுக்கப்படுகின்றன. இத்தன்மை அனைத்தும் இம்மொழி வினைச் சொற்களிலும் உள்ளனவாம்.

4. 1. ஹிட்டைட் மொழியில் ஆண்பால் சொற்கள் எல்லாம் ஒரு பிரிவாகவும் பிறசொற்கள் மற்றொரு பிரிவாகவும் இருக்கக் காணலாம். இதன்கண் பெண்பால் எனத் தனிப்பால்பிரிவு இல்லை. நாம் பெண்பால் சொற்களாகக் கருதுவன அஃறிணையில் அடங்கியுள்ளன.

4. 2 தெலுங்கு, குருக், மால்டோ, கோலாமி மொழிகளில் பெண்பால் ஒருமையை அஃறிணையாகக் கருதுவதும் கூய். கோண்டி மொழிகளில் பெண்பால் ஒருமையும் பன்மையும் அஃறிணையாகப் பயன்படுவதும் இவண் கவனித்தற்பாலன.

5. 0. உலகில் காணப்படும் மொழிகள்பலவற்றில் ஆண், பெண் பால் பகுப்பு காணப்படுகின்றது. இப்பகுப்பு பலமொழிகளில் பலவகையாக அமைந்திருத்தல் காணலாம் ரொமான்ஸ், செமிட்டிக் போன்ற மொழிகளில் ஆண்களை உணர்த்துவன ஆண்பாலாகவும் பெண்களை உணர்த்துவன பெண்பாலாகவும் இருப்பதுடன் நாம் தமிழில் அஃறிணை எனக் கருதும் சொற்களும் ஆண்பாலாகவும் பெண்பாலாகவும் கருதப்படுதல் காணலாம்.

5. 1. எடுத்துக்காட்டாக ஸ்பானிஷ் மொழியில் ஆண்களை உணர்த்தும் சொல் (lombre) ஆண்பாலாகவும் பெண்களை உணர்த்தும் சொல் (mujer) பெண்பாலாகவும் இருப்பதுடன் முன்பு குறிப்பிட்டது போன்று புத்தகம்,

கம்புபோன்ற பொருட்களைக் குறிப்பன ஆண்பாலாகவும் வீடு, மேசை போன்ற பொருட்களைக் குறிப்பன பெண்பாலாகவும் உள்ளன. இங்கிலையில் இப்பெயர்களுடன் வரும் சிறப்புச் சுட்டுகளும் [definite articles] பெயரடைகளும் ஆண், பெண் பெயர்ச் சொற்கட்கேற்ப மாறிவருகின்றன. இதனால் இப்பெயர்கள் அனைத்தும் அவை ஏற்கும் சிறப்புச் சுட்டுகட்கேற்பவும், பெயரடைகளில் காணும் ஆண்,பெண் ஒட்டுகட்கேற்பவும், [தொடரியல் அடிப்படையில்] பெயர்களில் காணும் ஆண், பெண் ஒட்டுகட்கேற்பவும் [சொல்லியல்] வகைசெய்யப்படுகின்றனவேயன்றி இயற்கைப்பாலின் அடிப்படையில் வகைசெய்யப் படுவதில்லை. இதுபோன்றே ஹாசா [ஆப்பிரிக்கா] மொழியிலும் மூங்கில், அரண்மனை, ஞாயிறு போன்ற பல அஃறிணைப் பெயர்கள் பெண்பால் பெயர்களாகவும் சக்தி, சைக்கிள், இயந்திரம் போன்ற பெயர்கள் ஆண்பால் பெயர்களாகவும் கருதப்படுகின்றன.

5. 2. இன்னும் சிலமொழிகளில் பெயர்கள் ஆண், பெண் பால்களாகப் பிரிக்கப்படினும் அப்பகுப்பு ஆண், பெண் என்ற அடிப்படையில் மட்டுமல்லாது பொருளின் அளவு, வடிவம், போன்ற பண்புகளின் அடிப்படையையும் கொண்டுள்ளமை காணலாம். எடுத்துக்காட்டாக ஆப்பிரிக்காவில் வழங்கும் மாசை [masai] மொழிச் சொற்களில் பொதுவாக ஆண்பாலைக் காட்டும் பொருட்களையும், பெரிய பொருட்களையும், உரம்வாய்ந்தவற்றையும் சுட்டுவன ஆண்பாலாகவும் பெண் பால் காட்டும் பொருட்களையும் சிறிய பொருட்களையும் உரம் குறைந்த பொருட்களையும் சுட்டுவன பெண்பாலாகவும் கருதப்படுகின்றன. பண்டை இலக்கண ஆசிரியர்கள் இவற்றை ஆண்பால், பெண்பால் எனவே

பிரிப்பர்.[1]

இம்மொழியில் மனிதனையும், நாயினையும் பையனை யும் குறிக்கும் சொற்கள் ஆண்பாலாகவும் சிறிய பையன், சிறிய நாய், சிறிய மனிதன் முதலியவற்றைக் குறிக்கும் சொற்கள் பெண்பாலாகவும் இருத்தல் காணலாம்

ஒல்—துங்கனி = மனிதன்
ஒல்—அயோனி = பையன் } (ஆண்பால்)
ஒல்—திய = நாய்

என்—துங்கனி = சிறு மனிதன்
எங்—அயோனி = சிறு பையன்
என்—திய = சிறுநாய்

5. 3. இதேநிலையை அமெரிக்க இந்திய மொழிக ளில் ஒன்றான சினூக் மொழியின்கண்ணும் காணலாம். இம் மொழி ஆண்பால் சொற்கள் ஆண்பாலைக் காட்டுவதுடன் (மனிதன், இளைஞன், பையன்) பொதுவாகப் பெரிய விலங் குகளையும் (கரடி, குதிரை முதலியன) பண்புச்சொற்களை யும் (சிறுமை, கூர்மை, பெருமை) வினையாலணையும் பெயர் களையும் (உண்டவை, கொதித்தவை) குறிக்கும் சொற்களை யும் கொண்டுள்ளன இதுபோன்றே பெண்பால் சொற்கள் பெண்ணினத்தைக்காட்டுவதுடன் சிறிய விலங்குகள், பற

1. The Masai language distinguishes by the article two genders or classes answering approximately to masculine and feminine. As a genral rule the former signifies big, strong, and masculine, whilst the latter may be taken to mean something, of a weak or feminine nature, and also of a diminitive or affectionate charecter.

A. C. Hollis, The Masai, their language and Folk lore, P. 9

வைகள் முதலியவற்றையும் அடக்கியுள்ளன.

6. 1. இன்னும் சில மொழிகளில் ஆண், பெண் பொது என்ற பால்பகுப்புள்ளது. எனினும் இயற்கைப் பால்பகுப்புடன் பொருந்துவதாகஇல்லை. எடுத்துக்காட்டாக ஹாட்டன்டோட் (ஆப்பிரிக்கா) மொழிகளில் ஆண் பால் ஆண்களைக்குறிப்பதுடன் அஃறிணைச் சொற்கள் பலவற்றையும் குறக்கின்றது பெண்பாலும் பெண்களைக் குறிப்பதுடன் அஃறிணைப் பொருட்களையும் குறிப்பிடுகின்றன. இதுமட்டுமன்றி பெரியவை சிறியவை என்ற அடிப்படையிலும் இப்பகுப்பு அமைந்திருத்தல் காணலாம். ஆணைக் குறிக்கும் சொல் மட்டுமல்லாமல் உத்தரக்கட்டையைக் குறிக்கும் சொல்லும் ஆண்பாலே. பெண்ணைக் குறிப்பதுடன் மரத்தைக் குறிப்பிடும் சொல்லும் பெண்பாலே. 'ஆள்' என்ற சொல்லும் கம்பைக் குறிக்கும் சொல் அஃறிணையாக உள்ளன. இதைப்போன்றே சில புஷ்மன் மொழிப்பால்பகுப்பும்.

kxoe—b = ஆண்
kxoɛ—s = பெண்
kxoɛ—i = ஆள்
nau—p = உத்திரக்கட்டை (ஆண்)
hei—s = மரம் (பெண்)
hei—i = கம்பு (பொது)
(கொரானு)

7. 0. உலக மொழிகள் சிலவற்றில் பால்பகுப்பிற்குப்பதிலாக வகை (class) பாகுபாட்டினைக் காணலாம். காங்கோ போன்ற ஆப்பிரிக்க நாடுகளில் வழங்கும் பந்து மொழிகளில் இத்தன்மை நன்கு காணப்படுகிறது. பெயர்கள் ஏற்கும் முன்னொட்டுகட்கேற்ப அவை பல வகைகளா

கப்பிரிக்கப்படுகின்றன சில மொழிகளில் சில முன்னெட்டு கள் பெரும்பாலும் பால்களுடன் தொடர்புகொண்டு காணப்படினும் அவை பால் காட்டுகின்றன எனக் கூறுதல் இயலாது.[2]

7. 1. சூலு, சுவாகிளி போன்ற மொழிகளின் பெயர்ச் சொற்கள் ஒருமை, பன்மை, காட்டும் முன்னெட்டுகட்கேற்ப பகுக்கப்படுகின்றனவே அன்றி ஆண், பெண் அஃறிணை என்ற அடிப்படையில் பகுக்கப்படுவதில்லை. இதே இனத்தைச் சார்ந்த ஷோனு மொழியில் மு—என்ற ஒருமையைக்குறிக்கும் முன்னெட்டு, ஆண், பெண், பொதுப்பாலுடன் வருதல் காணலாம்-

மு—கத்ஸி = பெண்
மு—ருமெ = ஆண்
மு—ன்கு = ஆள் (பொது)

இதனல் இம்மொழிகளின் மூவிடப் பெயர்களிலும் இப்பால் வேற்றுமை காட்டப்படுவதில்லை. எடுத்துக்காட்டாக சுவாகிளி மொழியில் காணப்படும் படர்க்கை ஒருமை, ஆண், பெண், அஃறிணை அனைத்தையும் காட்டுவதாக உள்ளது. இதனல்தான் இம் மொழிகளை வகை (செய்) மொழிகள் (class languages) என்பர்.

---

2. There is no distinction of masculine and feminine it is not merely that nouns have no feminine terminations; but there are not even separate pronouns correspoding to 'he' and 'she'.

There is, however, a set of distinctions, quite strange to us nouns being divided into a number of classes (usually eight or nine) distinguished by their prefixes.

A. Werner, The language Families of Africa, p 22

யெயெ (yeye) = அவன், அவள், அது (சுவாகிலி)

இயெ (iye) = அவன், அவள், அது (நியன்ஜா)

இவொ (ivo) = அவர்கள், அவைகள் (நியன்ஜா)

7. 2. இதுபோன்றே மலேனேஷியன் மொழிகளில் ஒன்றான இசை (isai) மொழிச் சொற்கள் இரண்டு வகைகளாகப் பிரிக்கப்படுகின்றன. மனித உறுப்புகளின் பெயர்கள், உறவுப் பெயர்கள், சில இடப்பெயர்கள் போன்றவை ஒருவகையாகவும் பிற பெயர்கள் அனைத்தும் மற்றொரு வகையாகவும் கருதப்படும்.

8. 0. மேற்கூறிய மொழிகளில் பலவகையான பாகுபாடுகள் இருக்கக் கண்டோம். ஆனால் கொரியன், ஜாப்பனீஸ், வங்காளி, ஒரியா, மைது, நைலாட்டிக்போன்ற மொழிகளில் எவ்வகையான பால்பாகுபாடும் இல்லை. சில மொழிகளில் ஒரே சொல் சந்தர்ப்பத்திற்கேற்ப ஆண், பெண் பால்களைக் காட்டுகின்றனவேயன்றி குறிப்பிட்ட ஒரு பாலைக் காட்டுவதில்லை. எடுத்துக்காட்டாக ஜப்பானிய மொழியில் 'உஷி' என்றசொல் பசு, காளை, பசுக்கள், காளைகள், மாடு, மாடுகள் எனப் பல பொருள்பட்டு நிற்கக்காணலாம். எனினும் ஆண், பெண் பால் குறிப்பிட்டுக்காட்ட வேண்டின் மிக மிக அரிதாக 0 என்ற ஒட்டினை இணைத்து ஆண்பாலையும் me என்ற ஒட்டினை இணைத்துப் பெண்பாலையும் காட்டுவர்.

8. 1. இம்மொழிகளில் பால் பகுப்பு இல்லை எனக் கூறும்போது இம்மொழியினர் ஆண், பெண், வேற்றுமை அறியாதவர்கள் என்றோ இவர்கட்கு ஆண், பெண் வேற்றுமையைச் சுட்டிக் காட்டிக் கூறவேண்டிய நிலை இல்லை என்பதோ பொருளல்ல. தமிழிலும் அஃறிணை சொற்களில் இலக்கண நூலோர் ஒருமை, பன்மை எண் வேற்றுமை

காணுகின்றனரேயல்லாமல் பால் வேற்றுமை காண்ப தில்லை. சேவல், பெடை, ஆண் குதிரை, பெண்குதிரை என்றெல்லாம் பிரித்துக்கூறும் நாம் அஃறிணை பெண்பால், அஃறிணை ஆண்பால் எனப் பிரிப்பதில்லை. காரணம் நம் மொழியின் அமைப்புதான். முன்னர்க் குறிப்பிட்டது போன்று 'சேவல் வந்தது' 'பெடை வந்தது' எனக் கூறும்போது வேறு வேறு விகுதிகள் இட்டுக்கூறுவதில்லை. இதனால்தான் நம் மொழி இலக்கண நூலோர் அஃறிணையில் பால் பகுப்பு கண்டதில்லை.

9. 0. மூவிடப் பெயர்கள் பொதுவாக மொழிகளின் அடிப்படைச் சொற்களில் (basic vocabularies) ஒருபிரிவாகக் கருதப்படும். மொழிகளில் காணப்படும் பால் பகுப்பினை மூவிடப்பெயர்களிலும் காணலாம். சில நேரங்களில் சில மொழிகளில் பெயர்ச் சொற்களில் காணப்பட்ட சில இலக்கணக்கூறுகள் காலப்போக்கில் அழிந்து மறைந்து விட்டாலும் மூவிடப்பெயர்களில் அழிவதில்லை. எடுத்துக் காட்டாக ஸ்பானிஷ், போர்ச்சுக்கீஸ் போன்ற மொழிகளில் அவற்றின் தாயக மொழியான லத்தீனில் காணப்பட்ட வேற்றுமை (case) சாதாரணப் பெயர்களில் இல்லாதிருந்த போதிலும் மூவிடப் பெயர்களில் காணப்படுகிறது என்பர்.[1]

---

1. The personal pronouns are the only words in Spanish which retain distinctions of case. In their fnll inflection they have four cases:-

M. Montrose Ramsey, A Spanish Grammer, p 85

While only the accusative case of nouns and adjectives has survived in Portuguese, the nominative and accusative and sometimes also the dative case of personal pronouns have survived.

Edwin B. Williams, From Latin to Portuguese, p 141.

9. 1. மொழிகளில் காணப்படும் பால்படிப்பினையை மூவிடப்பெயர்களிலும் காணலாம் தமிழில் ஆண், பெண், அஃறிணை பால்கள் படர்க்கைப் பெயரில் மட்டுமே காட்டப்படுகின்றன. தன்மை, முன்னிலையில் இத்தன்மை காட்டப்படுவதில்லை. ஆனால் பல மொழிகளில் முன்னிலையிலும் இத்தன்மையைக் காணலாம். அரபிக்போன்ற செமிட்டிக்மொழிகளிலும் ஹாசாபோன்ற பிற ஆப்பிரிக்க மொழிகள் பலவற்றிலும் படர்க்கையிலும் முன்னிலையிலும் பால் பாகுபாடு உள்ளது.

கை = நீ (ஆண்)
கே = நீ (பெண்)
ஷீ = அவன்
இதா = அவள் (ஹாசா)

9. 2. ஹாசா, எகிப்தியன் போன்ற மொழிகளில் முன்னிலைப் பன்மையில் பால்பகுப்பு காட்டப்படாதிருக்க அரபிக் ஷில்கா போன்ற சில மொழிகளில் முன்னிலைப் பன்மையிலும் ஆண், பெண் வேற்றுமை உள்ளது.

கி = நீ (ஆண்)
கிமி = நீ (பெண்)
குனிந்தி = நீங்கள் (பெண்)
குனி = நீங்கள் (ஆண்)

9. 3. இன்னும் சில மொழிகளில் முன்னிலையில் ஆண், பெண் வேற்றுமை காட்டப்பட படர்க்கையில் காட்டப்படுவதில்லை.

கா = நீ (ஆண்)
யீ = நீ (பெண்)
நீயீ = அவன், அவள், அது

வுன் = நீங்கள் (ஆண், பெண்)
ம = அவர்கள், அவைகள் (அங்காஸ்)

9. 4. உலக மொழிகளில் ஒரு சிலவே தன்மையிலும் பால்வேற்றுமை காட்டுவதாக உள்ளன. ஹாட்டன் டோட் மொழிகளில் ஒன்ருன கொரானுவிலும் நடு புஷ்மன் மொழிகளிலும் இப்பண்பு உள்ளது.

திரெ = நான் (ஆண்)
த = நான் (பெண்)

9. 5. ஆப்பிரிக்காவில் வழங்கும் ஷில்கா மொழியில் தன்மை ஒருமையில் எப்பகுப்பும் இல்லாதிருக்க தன்மைப் பன்மையில் ஆண், பெண் பாகுபாடு உள்ளது.

நுக்னி = நாம். நாங்கள் (ஆண்)
துக்ந்தி = நாம், பெண்கள் (பெண்)

10. 0. தமிழில் படர்க்கை ஒருமை (அவன், அவள்) ஆண், பெண்பால் காட்ட பன்மை (அவர்கள்) பால்காட்டி நிற்பதில்லை. ஆண், பெண் இருபாலுக்கும் பொதுவாக இருக்கக் காண்கிருேம். இதுபோன்று உலகில் காணப்படும் சில மொழிகளை எடுத்து நோக்கின் ஒருபொருளைக் குறிக்கும் சொற்கள் ஒருமையில் ஆண் அல்லது பெண்பாலாக இருக்க பன்மையில் நேர்மாருன பாலைக்காட்டும் தன்மையைக் காணலாம். எடுத்துக்காட்டாக ருமேனியன், சோமாலி(ஆப்பிரிக்கா) துனிக்கா (அமெரிக்கா) போன்ற மொழிகளைக் குறிப்பிடலாம்.

10. 1. ருமேனியன் மொழியில் நாற்காலி, தோள், அடிபோன்ற ஆண்பால் சொற்கள், பன்மையில்வரும்போது பெண்பால் பன்மையின் சிறப்புச் சுட்டினை ஏற்றுப் பெண்பாலாக வருதல் காணலாம். இதுபோன்றேசோமாலிமொழி

யில் nag (பெண்) என்ற சொல் பெண்பாலாக இருக்க nago (பெண்கள்) என்ற பன்மை ஆண்பாலா இருக்கிறது. அமெரிக்க இந்திய மொழிகளில் ஒன்ருன துனிக்காவில் கல், மண் போன்ற சொற்களின் ஒருமையும் இருமையும் ஆண்பாலாகக்கருதப்பட பன்மை பெண்பாலாக உள்ளமை காணலாம்.

தஷிஹ்கலிகு = the stone [ஆண்பால்]
தஷிஹ் கலிகுனிம = இருகற்கள் [ஆண்பால்]
தஷிஹ்கல்சினிம = கற்கள் [பெண்பால்]

11. 0. பால் காட்டும் மொழிகள் அனைத்தையும் எடுத்துநோக்கின் அவற்றின் இலக்கணக் கூறுகளிடையே இத்தன்மை பலமாதிரியாக இருத்தல் காணலாம். சில மொழிகளில் வெறும் பெயர்ச் சொற்களில் மட்டும் இவ்வேற்றுமை காட்டப்பட இன்னும் சில மொழிகளில் வினைச் சொற்களும் பால்காட்டுதல் காணலாம். ஆங்கிலம் பெயர்களில் மட்டும் [he, she, it] பால் பகுப்பு காட்டுவதும்தமிழ் பெயர்வினை இரண்டிலும் பால்காட்டுவதும் மலையாளம் வினைமுற்றுகளில் பால்காட்டாது வினையாலணையும் பெயர்களில் மாத்திரம் காட்டுவதும் இவண் குறிக்கப்பாலன.

11. 1. இன்னும் சில மொழிகளில் பெயரடைகளும் ஆண், பெண் பால்காட்டிநிற்கக்காணலாம். எடுத்துக் காட்டாக அரபிக் மொழியில் இத்தன்மை உள்ளது. 'பழைய' என்ற பொருளில் வரும் 'கதீம' என்ற சொல்ஆண் பாலைக்காட்ட இதே பொருளில் வரும் 'கதீமக்' என்றசொல் பெண்பால் காட்டும்.

11. 2 வேறு சில மொழியில் பொது, சிறப்புச் சுட்டுக்களிலும் பால் வேற்றுமை இருக்கக் காண்கிறேம். ஜெர்மன் மொழியில் இத்தன்மை நன்கு காணப்படுகிறது. ஆண் பால் ஒருமையில் der, des, dem, den என்றசொற்களும் பெண்

பால் ஒருமையில் die, der, der, die என்ற சொற்களும் அஃறிணை ஒருமையாயின் das, des, dem, das என்ற சொற்களும் சிறப்புசுட்டுகளாக வருகின்றன இச் சொற்கள் முறையே, எழுவாய், அது, கு, ஐ வேற்றுமைகளையும் காட்டும். இது போன்றே ஸ்பானிஷ் சொற்களும் ஆண்,பெண் பால் (el,la) ஒருமையையும் பன்மையையும் (los, las) காட்டுகின்றன.

la mesa larga = the long table (பெண்)
el palo largo = the long stick (பெண்)

12. 1. பால்காட்டும் மாதிரியிலும் மொழிகள் தம்முள் வேற்றுமை உள்ளது. தமிழ், மலையாளம் போன்ற மொழிகள் சில பின்னொட்டுகளால் பால்காட்டும்,

அவள் [ava—l]
அவன் [ava—n]
அது [a—tu]
துணைவன் [tunai—van]
துணைவி [tunai—vi]

12. 2 மாசை மொழியின் கண் முன்னொட்டுகள் பால் வேற்றுமை காட்டும்.

ol—tungani = மனிதன்
en—tungani = சிறு மனிதன்

13. 0 பால்காட்டும் ஒட்டு அல்லது சொற்களின் பொருள்கள் ஆராயின் சில மொழிகளில் ஆண், பெண் எனப் பொருள்படுவதையும் இன்னும் சில மொழிகளில் தந்தை அல்லது தாய் எனப் பொருள்படுவதையும் காண லாம்.

13. 1. ஆண்—பெண்
பி = ஆண்
குர்குரி = பெண்

பர் பி = ஆண் குதிரை
பர் குர்குரி = பெண் குதிரை

13. 2. தந்தை—தாய்

se—gwenga = சேவல் (தந்தை-கோழி)
na—gwanga = (தாய்-கோழி) (கண்டா)

14. உலக மொழிகள் பலவற்றின் வரலாற்றினை ஆராயும்போது பால் பற்றிய சில உண்மைகள் வெளியாகும். பல மொழிகளின் வளர்ச்சியில் அஃறிணை அழிந்துவிட்ட நிலையினைக் காணலாம். எடுத்துக்காட்டாக லத்தின் மொழியின்கண் முன்னர்க் குறிப்பிட்டது போன்று ஆண், பெண் அஃறிணை என முப்பால் பகுப்பு இருக்க அதிலிருந்து பிறந்த ரொமான்ஸ் மொழிகளில் அஃறிணை அழிந்துவிட்ட நிலையைக் காணலாம். இம்மொழிகளில் சில அஃறிணைப் பெயர்கள் ஆண்பாலாகவும் வேறு சில பெண்பாலாகவும் மாறிவிட்டன. இதுபோன்றே வடமொழியில் முப்பால் பகுப்பு இருக்க அதிலிருந்து பிறந்த இந்தி, சிந்தி, பஞ்சாபி போன்ற மொழிகளில் ஆண், பெண் பால்கள்மட்டுமே இருக்கக்காண்கிறோம். இதற்கு மாறாக வங்காளியில்எவ்வித பால் பகுப்பும் இல்லை.

செந்தமிழ் இதழில் புத்தகங்களுக்கு மதிப்புரை வழங்கப்படுவது யாவரும் அறிந்ததே. மதிப்புரை விரும்புவோர் தங்கள் புத்தகங்களில் இரண்டுபிரதிகளை அனுப்பி வைக்கவேண்டும். மதிப்புரை இடப்படும் புத்தகங்கள் தமிழ்ச்சங்கப் ''பாண்டியன் நூலகத்தில்'' சேர்க்கப் பெறும்.

பொறுப்பாசிரியர்.

நந்தா விளக்கு

ஓரங்க நாடகம்:

தி. வேலவன்,

திருவனந்தை.

7

அல்லல்

[முற்பகல். பறம்பின் மடியில் மூவர் படைகளும் முற்றுகையிட்டு படைவீடுகளமைத்துள்ளன. வேந்தர் மூவரும் பாசறையில் அமர்ந்திருக்கின்றனர்]

குட்டுவஞ்சேரல்: திங்கள் ஐந்து போயின! என் தலைநகர் மீள விழைகின்றேன். குரிசிலை வெல்லல் அரிதிலும் அரிது. வாணுள் முழுதும் முற்றுகையிடினும் வெற்றி பெறல் உறுதியன்று. அது கனவே!

நெடுங்கிள்ளி: நீரில் இறங்கிய பின் தயங்கி என்ன பயன்? ஆவது ஆகுக. முடிவறியாமல் முற்றுகை தவிர்ப்பதோ?

[படைஞன் ஒருவன் ஓலைகோத்த அம்பு ஒன்றைக் கொண்டுவருகின்றனன்]

படைஞன்: வாழி வேந்தே! நம் படை நடுவண் இவ்வோலை கோர்த்த அம்பு வீழ்ந்தது.

மாறன்: ஓலையோ! [படைஞன் ஓலைகோர்த்த அம்பை மாறனிடம் கொடுக்கின்றனன் மாறன் பெறுசின்றனன்]

நெடுங்: முற்றுகையின் முதல்விளைவு, பாரியின் அடைக்கலவோலை

மாற: (ஏளனமாக) ... ஆம்! [ஓலையைப் படித்தபின் கிள்ளியிடம் கொடுக்கின்றனன். அதைப்படித்த கிள்ளியின் முகம் மாறுகிறது. சேரலன் கையில் ஓலையைக் கொடுக்கிறன். சேரலன் வாங்கிப் படிக்கின்றனன்]

குட்டு: மன்னர்! பறம்பினை வெல்லல் நீயிர் எண்ணுவதுபோல் எளிதன்று. உழாமல், பயிரிடாமல் உயிர்வாழ நல்லுணவு அளிக்கவல்லது பறம்பு. மூங்கிலரிசியுளது; நறுந்தேனுளது; பலவின் பழனுளது; வள்ளிக்கிழங்குளது நனிவாழ. வானம் போன்றது பறம்பு. வானின் மீனம்போன்றன அதன் சுனைகள்.

பழையன்மாறன்: ...இஃது கபிலர் ஓலையன்றோ? நம்மையன்றோ அடைக்கலம் புகவிடுக்கின்றார்.

குட்டுவஞ்சேரல்: சென்றாலென்ன?

நெடுங்கிள்ளி: சென்றாலென்ன! நன்று ..நீவிர் செல்லும்!

[மற்றொரு படைஞன் முடிப்பொன்று சேர்ந்த வேல்கொண்டுவருகின்றனன்.

படைஞன்: மன்னவ! வேலொடு இம் முடிப்பு படை நடுவண்வீழ்ந்தது. கொண்டுவந்தேன்.

மாறன்: வியப்பாக இருக்கிறதே! கொடு .. [படைஞன் அதைக் கொடுக்கிறான். முடிப்பை அவிழ்க்கின்றான் மாறன்]

குட்டுவஞ்சேரல்: பாரியின் அன்பளிப்போ?

மாறன்: (அவிழ்த்து அதனுள்ளிருக்கும் சோற்றைக் கையிலெடுத்து)... ...சோறு...... நெற்சோறு...... இன்னும் அவர்க்குக் கிடைக்கின்றதோ? புதுநெற் சோறன்றோ? எவ்வழிப் பெற்றனர். எல்லாம் வியப்பாகவுளதே! யாங்குக்கொண்டனர் புதுநெல்? திறைஇறுத்தான்! ஓலைவிடுத்தான்!! உணவு அளித்துளன்!!!

குட்டுவஞ்சேரல்: நெற்சோறோ!...... இருக்காது!...... (எடுத்துச் துச்சுவைத்தபின்) ...ஆ ஆ...அருமை! நெல்லரிசிச்சோறே! நம்நாட்டரிசியும் இத்துணைச் சுவைக்காதே! ..... பாரி அன்புள்ளவன் இன்றேல் அரிதிற்பெறும் நெல்லரிசிச் சோறு

அளித்திருப்பானே?

[கபிலன் அவர் பாசறையுள் நுழைகிருன். அவனைக்கண்டமூவரும் ஒருவரை ஒருவர் பார்க்கின்றனர்]

கபிலன்: வேந்தீர்! நும்மை ஒருங்கு காணக் களிக்கும் என் உள்ளம். ஆயின் நும் செயல் நினைந்து வருந்தும். நும் செயல் முற்ருது. வெற்றி கிட்டாது. சிற்றூர்கள் முன்னூறு கொண்டதே பறம்பு. வாணாள் முழுதும் முற்றுகையிடினும் பெறுகிலிர். மூங்கிலரிசியும், பலவின்பழனும், வளமுறு கிழங்கும், நறுந் தேனும் மிசைந்து பல்லாண்டுநீடுவாழலாம். பாணர்க்குப் பாரி முன்னூறு ஊர்களையும் பரிசிலாய் வழங்கியுளன். எஞ்சியோர் யானும் அவனும்மே! மரந்தொறும் யானை பிணித்துக் காணுமிடமெங்கும் தேர்நிறுத்திப் போர் செய்யினும் இக்குன்றம் நும்கைபுகாது. வாள் கொண்டு பறம்பைப் பெறல் அரிது. அம்முயற்சி அயர்திர்! அத்தொழிலை விட்டொழிமின்!

பாடுநர்காணின் பரிசுமிகக் கொடுக்குநன் பாரி! ஆடலும் பாடலும் அறிவீராயின், நீயிர் பாடுநகராகத் துணைவியர் ஆடுநராக யாழிசைத்து ஆடிப்பாடிக் களிப்பூட்டுவீராயின் வேண்டுவ பெறுகுதிர்! வேறுநெறியில் பறம்பைப்பெறல் நும் மனைவியர் இழக்கும் செயலாகும்!

8

வஞ்சம்

[இரவு. பாண்டியன் அவை. முற்றுகை தவிர்த்தோர் உரையாடுகின்றனர் காற்றில் விளக்குகள் சுழன்று ஆடிக்கொண்டிருக்கின்றன.]

பழையன் மாறன்:- இனியும் வாழ்ந்து பயனென்கொல்! சிறுவலி வேளின் செருக்கடக்காது யாங்கன் பெருவலி வேந்தராவோம்? திங்களாறு முற்றுகையிட்டு அதையும் தவிர்த்தோம்.

சிறுமைபூண்டோம். புலவர் சொல்லால் புண்பட்டு மீண்டோம்... அவனிடம் சென்று அடைக்கலம் புகல்வேண்டும். ஈயென இரந்து அரசுபெறல்வேண்டும்!

குட்டுவஞ்சேரல்: நீயிர்பாணராக வாரும்! நும் மனைவியர் விறலியராக அழைத்துவாரும்! அவர் ஆட நீவிர் யாழிசைமின்! அவன் இசைபாடிப் பரவுமின்! மகிழ்வூட்டுவீரேல்! எம்மொடு அவனையும் உமக்கீவான்......நல்ல கபிலர்!

நெடுங்கிள்ளி: ஆம் நல்ல கபிலர்! தன்னையே காட்டிக்கொடுத்துள்ளார். நஞ்சை நஞ்சால் மாற்றலாம்! மன்னவரே! கபிலரே நமக்கும் பரிந்துள்ளார். பாரியை வெல்லுவழி சொல்லியுள்ளார்!

பழையன்மாறன்: நம்மை இகழ்ந்தன்றோ வென்றார். பாரிக்கன்றோ வெற்றியீட்டினர்.

நெடுங்கிள்ளி: அவ்வெற்றி...நம்...வெற்றி......அவர் சொற்படிச் செயல்படின்!

குட்டுவஞ்சேரல்: நல்லது...நம் மனைவியரோடு பாரி முன் ஆடிப் பாடுவோம். அவன் மகிழ்வன். நாட்டைப் பரிசிலாகாக் கேட்போம். தருகுவன்!... மறுத்தால்... தரமறுத்தால்...வந்துவிடுவோம்... அன்று அன்று...அவனைக்கொன்று பெறுவோம்!

நெடுங்கிள்ளி: ...ஆம் அதுவே நெறி! அவ்வழிச்செலின் நம்வினை வெல்லும் ...படைசெல்லாவிடத்துப் பாணர் செல்வர். வேல் செல்லாவிடத்து விறலியர் செல்வர்!...... நம்வினை முற்றும் வகைசெய்வர்!

மாறன்: யாழ்மீட்டியோ பாரியை வீழ்த்துவது?

குட்டுவஞ்சேரல்: ...வேண்டாம்!...... நம்மோடு இணங்கிவிடின் அழைத்துவரலாம்!

நெடுங்கிள்ளி: நச்சரவும் நஞ்சுதோய்வேலும் எழிலுடையனவே!

அதன் கூர்வாய் படின் மீள்வுண்டோ? எழிலெண்ணிப்போற்றல் வேண்டுதிரோ?

குட்டுவஞ்சேரல்: போற்றச் சாற்றியோர்யாவர்? ...தூற்றுவோம்! இன்றேல்!... இன்றேல்!... மாற்றுவோம்!

பழையன்மாறன்: நல்லோரை வஞ்சித்தல் எளிது. வஞ்சனையால் அவனை வெல்லல் மிக எளிதே! அது விழையின் முன் பே. செருகளம் புகுமுன்பே வெல்லல் இயலுமே! உலகு போற்ருது; நல்லோர் தூற்றுவர்; சான்ருேர் பழிப்பர்! பொன்ருப் பழிசூழும். என்று போருக் கெழுந்தோம். வஞ்சத்தால் வரும் பழிகூறிவையம் நெஞ்சு நோவக் கூறிக்கொல்லுமே!

பாடல் கண்டஞ்சி வந்தோம்! குறைகொண்டு உயிர் வாழ்ந்தோம். இன்ருே அழியாப் பழிசுமக்க அழைக்கின்றீர். அரசியல் பிறழச் சொல்கின்றீர். இச் செயலுக்கு என் நெஞ்சம் நெகிழாது.

வேந்தன் முறைதவறினன். புறம்பட்டனன். இதையெல்லாம்பொறுத்தேதன் அறம்தவருமல், அரசியல்பிறழாமல் திறையீந்தனன். அவனையோ வீழ்த்தல் வேண்டும்.

காத்தவரையும் எதிர்த்தவரையும் உலகம் மறவாது. மானமழியச் செங்கண்மாஞாலமேவரினும் வேண்டேன். இப்பழி சூழ்வினைக்கு என்துணை வேண்டலிர். போரன்றி வேறு முறையில் எவனையும் வீழ்த்தயான் விழையேன்!...

யான்வேண்டியது புகழ்! இசைவிரும்பி இசைகெட முனைந்தேன். இனி அதுவும் வேண்டேன். யானிறப்பினும் வஞ்சம் என் நெஞ்சம் புகாது...வஞ்சம் என் நெஞ்சம் புகாது.

[பழையன் தலை குனிந்து செல்கின்றனன்]

நெடுங்கிள்ளி: வாளெடுத்தாலென்? யாழெடுத்தாலென்? இசைக் கோலெடுத்தாலென்? வடிவேலெடுத்தாலென்?... செழியன் விதைத்தான். வளர்ந்துளது. விளைவு வேண்டேன் என்கின்றனன் .. அறுக்கவாரேன் என்கின்றனன்... நன்று... யாங்கன

மேனும் பகைஞனை வீழ்த்தல் வேண்டும். பழையன் அஞ்சி விட்டான்! சேரமானே!

குட்டுவஞ்சேரல்: யானஞ்சேன் செம்பிய! நாளையே நினைவு செயல் படுதல் சாலும்...வினைவிரைந்து முற்றுக!...வளவ! நீயே அர சியல் அறிந்தோன்!

9

பரிசில்

[மாலைப் பொழுது. பாரியின் இசையரங்கம். பாணர் யாழிசைக்க விறலியர் ஆடுகின்றனர். இசையினில்மகிழ்ந்தனன். ஆடல் அடங் கியது. பாடல் நின்றது]

பாரிவேள்: பல்யாழ்ப்பாண! கலைகாத்து வாழும் நும் தாயம்வாழி! நும் கவின்கலை வனப்புறுக! இத்துணைப்போழ்தும் தமிழிசை யினில் மூழ்கித் திளைத்தேன்! ஆறெனை ஓடிவரும் அரும்பண் ணுடன் பாணிகூட இங்காடிய ஆடல் கண்டு வுலகையே மறந்தேன்.

கலைவல்லாரையெல்லாம் என் நாட்டிலே வாழவைக்கும் ஆவல் உடையேன். பரிசில் வாழ்வு மேற்கொண்டவர் நீயிர். புட்கள்போல மகிழ்ந்து புலம்பல நாடிச்செல்லுநர். புதுக்கலை களெல்லாம் நும் செல்வமாகுக. நெஞ்சத்துயர் போக்கும் கலைபல நும் யாழ்கூட்டுக. நும் கூத்துகாட்டுக. நும் இசை எங்கும் முழங்குக. யான் செய்யவல்லது... (கழுத்தணியைக் கழற்றுகிறான். தன்னண்டையிலிருந்த பொற்காசும் துகிலும் எடுத்து நீட்டுகிறான்) ......இச்சிறு கைமாறே! பெற்று மகிழுமின்!

பாடுநன்: வேந்தே! நின் கலைநெஞ்சம் யாம் அறிவேம்! நின் போன்றோர் போற்றின் எம் கலை பொன்றாது. நின் விழைவும் விருப்பும் எம்மை வாழ்த்தும்... இனியாம் சிறப்புறுவேம்.

[அவன் தலையசைக்கிறான். பாரியின் அருகில் நின்ற ஒருவன்

சுரிகையால் பாரியைத் தாக்குகின்றனன். மற்றையோரும்சேர்ந்து வீழ்த்துகின்றனர். பணியாளர் கலவரத்தோடு ஓடிவந்து வேல் முனையில் அவரை நிறுத்துகின்றனர். குருதி சிந்தும் உடலோடு எழ முயல்கின்றனன் பாரி. சிலர் அவனைத் தாங்குகின்றனர்]

பணியாளர்: அரசே! அரசே! ஈதென்ன கோலம்! மேனியெலாம் குருதி! உடலெங்கும் புண்.

பாரி: அவர் விழைந்த பரிசில்! பண்பாடுநர் தந்தவை! அவரைப் பிணியேல்! விடுதிர்! இப்பாணரையும் விறலியரையும் காவலொடு நம் நகர்புறத்தே விடுத்துவருதிர்!(தளர்ந்து அமர்கின்றனன்)

பணி: வேந்தே! இவர் கொலைஞர். நின் குருதி சிந்தியோர்! மன்னா! இவர் கொலைஞர். கொல்லற்குரியோர்!

பாரி: இசைகேட்டு நெஞ்சு பனித்தது. அவர் செயல்கொண்டு உடல் பனிக்கிறது...அவர் கலைஞர்...யாழ்ப்பாணர்...பாடுநர் ...ஆடுநர்...அவரை விடுத்து வருதிர்!... பாணரே அஞ்சன்மின்!...இக்கலைக்குழு நம் மலைகடந்தது என்பதைக் கேட்டாலல்லால் எனக்கு உய்வில்லை!

கலைஞர்: மன்னவ!... பாரிமன்னா!... எம்மைக்கொல்லப் பணிதிர்! கொன்றுவிட நின்னவர்க்குப் பணி! நின்நெஞ்சம் அறியாது வஞ்சம் சுமந்துவந்தேம்! நின்கலையுணர்வறியாது நிலையழிந்து விட்டேம்...அழிவு தொட்டேம்!...இனியெம்வாழ்வும்அழியும்! அழிக்க ஆணையிடுதிர்...... எமக்கு அமைதி அப்போழ்தே கிட்டும்!

பாரி: எனதுயிர்மாயும்...உலகு அதனால் இழப்பது ஒன்றும்இலது. நும்முயிர் மாயின் கலையழியும்...தமிழுலகின் கலையுணர்வு குன்றும்.....! இவரைக் கடிதே நகர்ப்புறத்து விடுத்துவருதிர்!

பணி: அரசே!...... இவரையும் யாம் விடுத்துவரல் வேண்டுங் கொல்லோ!

பாரி: நீயிர் என்மேல் கொள்ளும் பற்று அவ்வுரை மாய்க்க எண்ணுகின்றது...அவர் செய்தன ஒன்றுமில. அவர் விரும்பிய பரிசில் என் குருதிபோலும்......பெற்றனர்...செல்கின்றனர்.... கபிலருக்கு ஓலைவிடுமின்!

[கலைஞரோடு பணியாளர்செல்கின்றனர். தானைத்தலைவன்ஓடோடி வருகின்றனன்... மருத்துவர் பின்வருகின்றனர்]

தானை: குன்றனையாய்! யான்காண்பது மெய்யோ? ஐயகோ! ஈதென்ன காட்சி! உள்ளமும் உடலும் குன்றிக்கிடப்பக்காண்கின்றேன்!...மருத்துவரே விரைவில் மருந்திடுதிர்!

பாரி: கவலன்மின். தலைவ!...மருந்துவேண்டேன்!...அதுஎன்உடலோடு உயிரை இனிப்பொறுத்திவிடாது... மூவர்பொருமைச் சுழற்காற்றில் என் வாழ்வுக்கலம் தடுமாறியது. கரைசேர்ந்தது... ஆயின் இன்று...இயற்கையே கடுவளி வீசி என் உயிர் ஒளியை அணைக்கிறது...

அகல் பறம்பே! அண்டியோர் வேண்டுவன கரவாது சுரந்து அவரைக்காத்து நில்! நல்வாழ்வுப் பயனெல்லாம் ஈந்து மகிழ்! நின் சிற்றருவிகள் ஓயாது முழங்குக! வனமெலாம் எழிலாடுக. விலங்குலவுக. பல்வளமும் நல்கிக் காப்பையோ யாவரையும்!

கபில...பெரும... இனி என் மகளிர்க்குத் தாயும் தந்தையும் நீவிர்...பெருமாற்கென் விடை கூறுமின்!

[பணியாட்கள் ஓடிவருகின்றனர். அங்கவையும் சங்கவையும் அலமந்து வருகின்றனர்]

அங்கவை சங்கவை: தாதையே...தந்தாய்!

தானைத்தலைவன்: மன்னவ!...மன்ன!...

பணியாளர்: அரசே!... சென்றனர்... அவர் கலைஞரல்லர்! மூவர் படைஞர்!... [கண்மூடி இருந்தான் பாரி]

தானைத் தலைவன்: தீமை கேளாது கண்மூடல் சாலுமென்று வீழ்ந்தனையோ? ஐயகோ!...பறம்பே!

பாரிமகளிர்: (அவன்மேல் வீழ்கின்றனர்)...தந்தாய்...ஐயாவோ? நின்னுயிரையும் பரிசிலாய் ஈந்தனையோ? மாரியன்ன பாரியெனும் மொழிகேட்டுப் பார்போற்றும் மூவருக்கு வாரிக் கொடுத்தனையோ பரிசிலாய் நின்னுயிரை!... எம்தந்தாய்!

[கதிரவன் மறைந்து, மதிஒளி வீசியது]

(முற்றும்)

செந்தமிழ் இதழ் பல அரிய செயல்களைத் தாங்கி வருவதை தமிழுலகம் நன்கு அறியும். பல புதிய மாற்றங்களோடும் பொலிவோடும் செந்தமிழ் இதழ் மாற்றப்பட்டுள்ளது. ஆண்டுச் சந்தா ரூபாய் ஐந்தேதான் எனவே ஒவ்வொரு தமிழ்மகனின் கையிலும் அது திகழவேண்டுமன்றோ? ஒவ்வொருவரும் ஓரிரு நண்பர்களைச் செந்தமிழுக்குச் சந்தாதாரர் ஆக்கி உதவுங்கள். அது தமிழுக்குச் செய்த தொண்டு தமிழர்க்குச் செய்த தொண்டாகும்.

—பொறுப்பாசிரியர்

துறைமங்கலம்-சிவப்பிரகாச அடிகள்

(பேராசிரியர், ஆ. சிவலிங்கனார், மயிலம்)

(சென்ற இதழ் 221-ஆம் பக்கத் தொடர்ச்சி)

புராணங்கள்.

அடிகள் சிறந்த புராணிகர் என்பதை அவருடைய திருக்கூவப் புராணம், சீகாளத்திப் புராணம் ஆகியவை அறிவிக்கும். புராணம் பாடுவோர் தம் புராணங்களில் ஒரு பொருளைப் பற்றி ஒருவர் கூறிச் செல்லும் கதையினைச் சிற்சில விடங்களில் மாற்றியும் கூட்டியும் விடுத்தும் பாடுவது இயற்கை, இம் முறையினைச் சச்சியப்ப சிவாச்சாரியார் போன்றவரிடத்தில் காணலாம். வான்மீக இராமயாணத்தினும் வேருகக் கம்பர் பல விடங்களில் திருத்திப் பாடிக் கொண்டதையும் நாம் அறிவம். நம்மடிகளும் தம்புராணங்களில் சிற்சில மாறுதல்களுடன் கதைகளைப் பாடியுள்ளார்கள்.

1 சீகாளத்திப் புராணப் —கண்ணப்பச் சருக்கம்

பெரிய புராணத்தில் கண்ணப்நாயனர் வரலாறு விரிவாகக் கூறப்பட்டுள்ளது. அதற்கும் சீகாளத்திப் புராணக் கண்ணப்பச் சருக்கத்து வரலாற்றுக்கும் உள்ள வேறுபாடுகளை மட்டும் பார்க்கலாம்.

1. பெரிய புராணத்தில் கண்ணப்பர் பலதடவை வேட்டைக்குச் சென்றதாகக் கூறப்படவில்லை. முதல் வேட்டையிலேயே குடுமித்தேவரைக் கண்டதாகவும், அவரிடத்திலேயே தங்கியதாகவும்அதில்கூறப்பட்டுள்ளது சீகாளத்திப் புராணக் கண்ணப்பசருக்கத்தில் கன்னிவேட்டைக்காகக் காடு சென்றதாகவும் திரும்பி வந்ததாகவும் பின்னரும் பல

முறைவேட்டை மேற்சென்று திரும்பியிருப்பதாகவும் கூறப் படுகின்றது.

2. ஒரு நாள் வேட்டைக்குச் சென்ற திண்ணனர் வேடர்களை நீங்கித் தனித்து உலாவி இளைத்து ஓர் மரநிழலில் துயின்றனர். அவ் வேளையில் சிவபெருமான் திருவெண்ணீறணிந்து புலித்தோலுடுத்துச் சடைமுடி கோலத்துடன் கனவில் தோன்றி "மைந்தா! இம்மலையில் பொன்முகரியாற்றங்கரையில் கல்லால மரத்தடியில் ஒரு சிவலிங்கம் உண்டு. அது துன்பம் அனைத்தையும் அழித்துப்பேரின்பம் அளிக்கும். நீசென்று வணங்குவாயாக" என்றுரைத்து மறைந்தருளினர் உடனே கண் விழித்த திண்ணனர் வியப்புற்றவராய் திக்கெலாம் நோக்கினர். அப்போது ஒரு பன்றி வேடாது வேட்டைக் கூக்குரலால் எழுந்து கட்டி வலையை அறுத்துக்கொண்டு மலைப்பக்கமாக விரைந்தோடியது. அதுகண்ட திண்ணனர் துரத்திச்சென்றனர். ஆலமரத்தடியிலே சிவலிங்கத் தருகே சென்றதும் பன்றி மறைந்தது. அதனைத் தேடிய காலையில் திண்ணனர் எதிரில் சிவலிங்கம் இருப்பதைக் கண்டார்.

இவ்வரலாறு பெரியபுராணத்துட் காணப் படாதது.

(3) நாணன் காடன் என்ற நண்பர்கள் சீகாளத்திப் புராணத்துட் காணப்பட வில்லை,

(4) முதல் நாள் வேட்டையிலேயே பன்றியைத் துரத்திச் சென்றதாகக் கூறும் பெரியபுராணம். திண்ணனர் கனவு கண்டு விழிக்கும்போது பன்றி யோடத் துரத்திச் சென்றதாகச் சீகாளத்திப் புராணம்கூறும்.

(5) நாணன் காடன் ஆகியவர்களை விட்டமையால் இவர்கள் பேசினயாவும் சீகாளத்திப் புராணத்தில் காண்டற்கில்லை. தீயையும் திண்ணரே கடைந்து கொண்டார்.

(தொடரும்)

சமயம்

237.	கயிலைபாதி காளத்தி பாதித்திருவந்தாதி	நக்கீர தேவநாயனார்
238.	நிஷ்டா நுபதி	ஆறுமுக சுவாமிகள்
239	சிவஞானசித்தியார்சுபக்கம்	அருணந்தி சிவசாரியார்
240.	பகவத்கீதை வசனம்	மொ பெ. மூதறிஞர்
241.	பெரிய புராணம்	சேக்கிழார் நாயனார்
242.	சைவ மஞ்சரி	பண்டிததுறைத் தேவர்
243	இருசமய விளக்கம்	அரிதாசர்
244.	நம்பியகவல்	புலவர். பாண்டியனார்
245.	யதீந்த்ரப்வணப்ரபாவம்	பிள்ளைலோகார்யஜீயர்
246.	காஞ்சிப்புராண வசனம்	சிவஞானயோகிகள்
247.	மஹாபாரதம் ஸபார்வம்	டி. வி. சீனிவாஸாசாரியார்
248	ரகஸ்யத்ரயசாரத்தின் பிரமாணத்திரட்டு	இராமானுஜதாசன்
249.	பண்டார சரித்திரம்	அம்பலவாண தேசிகர்
250.	வசன பூஷணத் சா[illegible]	அண்ணங்கராசாரியர்
251.	சிவ[illegible]சம்	உமாபதி சிவாசாரிய சுவாமிகள்
[illegible]2.	திருப்போரூர்ச் சந்நிதிமுறைமூலம்	சிதம்பர சுவாமிகள்
253.	,,	,,

254.	ஞானமிர்தம் மூலமும்—உரையும்	வாகீச முனிவர்
255.	,,	,,
256.	மெய்கண்ட சாத்திரம்	சைவசித்தாந்த நூற்பதிப்பு கழகம்
257.	பகவத்கீதா பாஷ்யார்த்த போதினி	ராமசாமி நாயுடு
258.	மெய்ஞான விளக்கம்	திருவேங்கட சுவாமிகள்
259	இருபா இருபஃது விரிவுக்கட்டுரை	அருணந்திதேவநாயனர்
260.	கந்தபுராணம்	கச்சியப்பசிவாசாரிய சுவாமி
261.	சேது புராணம்	நிரம்பவழகியதேசிகர்
262.	திருவிளையாடற் புராணம்	பரஞ்சோதிமாமுனிவர்
263.	பெரியாழ்வார் திருமொழி	பெரியாழ்வார்
264.	,,	,,
265.	திருவிளையாடற்புராணம்	பரஞ்சோதிமுனிவர்
266,	பெரியதிருமொழி விரிவுரை	திருமங்கையாழ்வார்
267.	,,	,,
268.	,,	,,
269.	பெரியாழ்வார் திருமொழிவுரிவுரை	பெரியாழ்வார்
270.	பகவத் விஜயம்	திருவேங்கடாச்சாரி
271.	சண்முகதேசிகஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் பத்தாண்டு ஆட்சிமலர்	தருமபுர ஆதீனம்
272.	உபதேசகாண்டம்	டி. சந்திரசேகரன்

273.	திருச்சந்தவிருத்தம்	திருமழிசையாழ்வார்
274.	திருவெழுகூற்றிருக்கை	திருமங்கைமன்னன்
275.	பாரதவெண்பா	பெருந்தேவனார்
276.	உபதேசகாண்டம்	டி. சந்திரசேகரன்
277.	தணிகைப் புராணம்	கச்சியப்ப முனிவர்
278.	மெய்கண்ட சாத்திரம் மூலம்-உரை	ப. ஆ. பண்டித்துரைத்தேவர்
279.	வசநபூஷணஸாரம்	அண்ணங்கராசாரியசுவாமி
280.	வசநபூஷணம்	பிள்ளைலோகாசார்யர்
281.	மஹாபாரதம் துரோண பர்வம்	டி. வி. சீனிவாஸாசார்யர்
232	தேசிகப் பிரபந்தம்—உரை.	வி. என். ராமதேசிகாசார்யன்
283.	பகவத் கீதை வசனம்	வடிவேலுசெட்டியார்
284.	சிவஞான போதம் பாண்டிப் பெருமாள் விருத்தி.	மெய்கண்ட தேவநாயனார்
285.	சங்கரதிக் குவிசய காவிய வசனம்	வித் யாரணிய முனிவர்
286,	சந்நிதி குரு பரம் பரை.	சடகோடய தீந்த்ரமாகாதேசிகன்
237.	திரு வாசிரியம்	நம்மாழ்வார்
288.	சங்கரதிக்குவிசய காவிய வசனம்	வித்யாரணியமுனிவர்
289.	பிரபஞ்ச விசாரம்	சபாரத்தின முதலியார்
290.	கீதாதத்துவம்	சத்தியானந்ததீர்த்த சுவாமிகள்
291.	ராமானுஜ விஜயம்	சுப்பிரமணியசிவம்
292	தத்துவப்பிரகாசிகை (தமிழ்மொழி பெயர்ப்பு)	நா. கிருஷ்ணசாஸ்திரி

293.	வினா-வெண்பா விடைவிளக்கக் கட்டுரை	உமாபதிதேவநாயனார்
294.	உண்மை விளக்கம் உதவிக்கட்டுரை	மனவாசகங்கடந்த நாயனார்
295.	திருஞானசம்பந்தர்	சிவஞானம்பிள்ளை
296.	குறுந்திரட்டு	தத்துவராயசுவாமிகள்
297.	திருவுந்தியாரும் திருக்களிற்றுப்படியாரும்	ப. ஆ. ஷண்முகசுந்தர முதலியார்
298.	சிவப்பிரகாசம்	உமாபதிதேவநாயனார்.
299.	பழனியாண்டவர் கீர்த்தனை	துரைசாமிக்கவிராயர்
300.	தியாகப்ரஹ்மோபநிஷத்	ராமசாமி பாகவதர்
301.	சங்கர திக்குவிஜய காவிய வசனம்	வித்தியாரணிய முனிவர்
302.	ராமகிருஷ்ணபரமஹம்சருடைய சரித்திரம்	—
303.	சுவாமிராமதீர்த்தபரமஹம்ஸ விஜயம்	நாராயணசுவாமி ஐயர்
304.	திருநாவுக்கரசர்	சே. சிவஞானம்பிள்ளை
305.	மெஞ்ஞான போதம்	வடிவேலு செட்டியார்
306.	வால்மீக இராமாயணம் யுத்த காண்டம்	வால்மீகி
307.	சிவசயிலேச விண்ணப்பமாலை	கே எம் முத்தையாபிள்ளை
308.	அடைவு அமைக்கும் அற்புதன்	திருமயிலை ஐயங்கார்
309,	சுப்பிரமணிய பராக்கிரமம்	நா. கதிரைவேற் பிள்ளை
310.	அமலநாதிப்பிரான்	திருப்பாணாழ்வார்

உள்ளுறை.

1. உலக மொழிகளில் பால்பகுப்பு
   ச. அகத்தியலிங்கம் 227
2. நந்தா விளக்கு
   தி. வேலவன் 244
3. துறைமங்கலம்-சிவப்பிரகாச அடிகள்
   ஆ. சிவலிங்கனார் 253
4 பாண்டியன் நூலகப் புத்தகப் பட்டியல் 255

ஆண்டுச் சந்தா 5—00 தனிப்பிரதி 0—50

விளம்பர விகிதம்:

அட்டை வெளிப்பக்கம் ரூ. 50—00
அட்டை உள்பக்கம் ரூ. 30—00

"செந்தமிழ் ஆசிரியர் குழு"

1. நிர்வாக ஆசிரியர், தமிழவேள் திரு. பி. டி. இராசன்,

பொறுப்பாசிரியர்கள்:

2. திரு. கி. பழநியப்பன்
   செயலாளர், மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை-1.
3. திரு. இரா. வே. நாராயணன் எம். ஏ.
   முதல்வர், செந்தமிழ்க் கல்லூரி, மதுரை-1.
4. பண்டித வித்துவான் மு. உலகநாதன்
   விரிவுரையாளர், செந்தமிழ்க் கல்லூரி, மதுரை-1.

இவ்விதழ், மதுரைத் தமிழ்ச்சங்கத்திற்காகத் தமிழவேள். திரு. பி. டி. இராசன் அவர்களால் மதுரை விவேகானந்தா அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப் பெற்றுள்ளது.